OS.No. 215/2023

Date : 13.10.2025

Witness Name & Rank – செல்லமுத்து - PW1

**சாட்சி அழைக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்**

1. நான் எதுவரை படித்துள்ளேன் என்றால் பன்னிரண்டாம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் பல்லடம் மாணிக்கபுரம் சாலையில் சிவசக்தி ஃபைனான்ஸ் என்ற நிறுவனம் நடத்தி வருகிறேன் என்றான் சரிதான். அவ்வாறு நிதி நிறுவனம் நடத்தி வருவதை எனது வழக்கு பிராதியிலும் பிரமாண வாக்குமூலத்திலும் குறிப்பிட்டு சொல்ல வில்லை என்றால் சரிதான். நிதி நிறுவனம் நடத்தி வருவதற்கு எனக்கு உரிய அனுமதி உள்ளதா என்றால் உள்ளது. அதை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பிரதிவாதி என்னிடம் கடன் வாங்கியதாக சொல்லி உள்ள நிலையில் எவ்வளவு காலத்தில் திருப்பி தருவதாக சொன்னார் என்றால் ஒரு மாதத்தில் தருவதாகவும் முடியாவிட்டால் மூன்று மாதத்தில் தருவதாகவும் சொன்னார். மாதம் வட்டியாக ரூபாய் எவ்வளவு என்றால் 3000 வட்டியாகும். பிரதிவாதி எத்தனை மாதம் வட்டி தந்தார் என்றால் ஒரு மாதம் கூட வட்டி தரவில்லை.
2. ஒன்றாம் பிரதிவாதியின் வீட்டு ஆவணத்தை கடன் வாங்கிய தினமான 12.05.2023 என்னிடம் கொடுத்தார் என்றால் இல்லை. அதன் பிறகு 10/8/2023 ஆம் தேதி கடனை திரும்ப செலுத்தி விட்டு வீட்டு ஆவணத்தை பெற்றுக் கொண்டார் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள கடனுறுச்சீட்டில் வியாபாரக் கடனுக்காக எழுதப்பட்டதாக சொல்லப்பட்டுள்ளது ஆனால் எனது பிரமாண வாக்குமூலத்தில் பிரதிவாதி குடும்பச் செலவுக்காக கடன் வாங்கியதாக குறிப்பிட்டு சொல்லப்பட்டுள்ளது என்றால் குடும்பச் செலவுக்காக தான் கடன் வாங்கியதாக சொல்லி உள்ளார்ஒன்றாம் அதிகாரி என்னிடம் கடன் வாங்கிய போது அவருக்கு அவரிடமிருந்து பாதுகாப்பிற்காக கடன் உறுதிச் சீட்டு வீட்டு பத்திரத்தையும் வாங்கி வைத்திருந்தேன் அதன் பிறகு ஒன்றாம் பிரதிவாதி மேற்படி கடனை திரும்ப செலுத்திவிட்டு வீட்டு பத்திரத்தை வாங்கிக் கொண்டார் ஆனால் என்னிடம் இருந்த கடன் உதவி சீட்டை அதிக லாபம் பெற வேண்டி தவறாக பயன்படுத்தி இந்த வழக்கு தாக்கல் செய்து உள்ளேன் என்றால் சரியல்ல.

எனவே இந்த வழக்கானது தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. .

---

சாட்சி கூறிய படி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் நேரடியாக கணிணியில் தட்டச்சிடப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்து பெறப்பட்டது

(Sd/−)K.Yuvaraj,B.A.,B.L.,
சார்பு நீதிபதி, பல்லடம்.

---